# உலக வங்கி

**தெற்காசிய வலையம்**


| | | |
|---|---|---|
| தொடர்புகட்கு | - | கொழும்பில் : சூளி டி சில்வா |
| இ - மேயில் | - | cdesilva@wordbank.org |
| தொலைபேசி | - | (94-11) 5561-323 |
| வாஷிங்டனில் | - | சீயிட்டா லிச்சம்போர்க் |
| தொலைபேசி | - | (1-202)483-8503 |
| இ - மேயில் | - | zlichtenberg@worldbank.org |


இலங்கையின் சுகாதாரப் பகுதி அபிவிருத்திக்கு உலக வங்கியின் உதவி

**கொழும்பு 15.06.2004:** உலக வங்கியின் அமெரிக்க டொலர் 60 மிலியன் உதவியுடன் இலங்கை அரசு அதன் சுகாதார சேவையின் தரத்தையும் அதியுயர் தன்மையையும் மேம்படுத்தும். அரசு மத்திய, மாகாண சேவைகளை உயர்த்தும் போது ஏழ்மையான மக்கள் சேவையைப் பெறுவதில் முன்னுரிமை பெறுவர்.

சுகாதாரப் பகுதி அபிவிருத்தித் திட்டம் (HSDP) இத்திட்டம் நோய்தடுப்பு வைத்தியத்தை ஊக்குவிக்கவும் உதவவும் செய்யும். இத்திட்டமானது உலக வங்கியின் இலங்கைக்கான நாட்டுதவித்திட்ட (CAS) வரைமுறைகட்கு கட்டுப்பட்டு எல்லா பிரசைகளும் சமமான சேவை பெறுவதை உறுதிசெய்யும். இத்திட்டமானது ஏலவே வெற்றிகண்ட நடவடிக்கைகளினடிப்படையில் பின்தங்கிய பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பெருந்தொகையான மக்களைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பீட்டர் ஹெறல்ட் இலங்கை நாடானது சுகாதார சேவையில் அதி அற்புத முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது எனவும் இச்சேவையானது அதே அதியுன்னத நிலையில் பேணப்படுவதற்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதில் உலக வங்கி பெருமிதமடைகிறதென்று கூறினார். மேலும் அவர் தெற்காசியாவில் வளரும் நாடுகளுக்கிடையில் இலங்கை சர்வஜன சுகாதார, கல்வி வசதிகளை பெற்றுக்கொடுக்கின்றது என்று உரைத்தார். மிக ஏழ்மையான, பாதிக்கப்பட்ட யுத்தப்பிரதேச மக்கட்கும், பெருந்தோட்ட மக்கட்கும் இச்சேவையினை மேலும் திறம்பட வழங்கயியலும் என்று உரைத்தார்.

முதற்கட்டமாக அமெரிக்க டொலர் 40 மில்லியனை மாகாணசபைகட்கும் மாகாண சுகாதார சேவைகட்கும் தாய், சேய் பராமரிப்பு சேவைகளை பலப்படுத்தக் கொடுக்கப்படும். இதில் ஏழ்மையானவர்கட்கும் சேவை குறைபாடுள்ள பகுதிகளில் நோய் தடுப்பு முறைகட்கும் சேவை செய்வதற்காக இவை பாவிக்கப்படும். தாய், சேய் மரணங்கள் கூடிய பிரதேசங்களுக்கு முன்னுரிமையளித்து மாகாண மட்டங்களில் உள்ள வேறுபாட்டை குறைப்பதை இதன் இடைநோக்காகக் கொண்டிருக்கும்.

இரண்டாவது கட்டமாக அமெரிக்க டொலர் 14 மில்லியன்கள் மத்திய திட்டங்களுக்கும், நாடளாவிய மருத்துவ மனைகளுக்கும் உதவியாக இருக்கும். தொற்று நோயற்ற நோய்களான இதய நோய், நீரழிவு நோய் போன்ற நோய்கட்கு இவை முக்கியத்துவம் கொடுக்கவும், மருத்துவ மனைகளின் அத்தியாவசிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் உதவும்.

மூன்றாவது கட்டமாக அமெரிக்க டொலர் 8.9 மில்லியன்கள் சுகாதார அமைச்சின் நிர்வாகத்திறமையினை மேம்படுத்தவும், அதன் நம்பிக்கைத் தன்மையையும், உண்மைத் தன்மையையும், பொது சுகாதார சேவையின் பொறுப்புத் தன்மையையும் ஊக்குவிக்கும்.

உலக வங்கியின் பொருளாதார நிபுணரும் இத்திட்டத் தலைவருமான மிச்சேல் கிரக்ஹோலட்டி என்பவர் இத்திட்டமானது இலங்கையில் வெற்றியாக நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் மிகவும் வசதிகளற்ற சமூகங்களை சென்றடையவும், சேவையினை மேம்படுத்தவும் உதவும் எனக் கூறினார்.

உலக வங்கியின் உதவும் கரமான சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் இவ் 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொடுக்கப்படுகின்றன.

இலங்கையில் உலக வங்கியின் நடவடிக்கைகள் குறித்து மேலதிக விபரங்கட்கு தயவு செய்து தரிசிக்கவும்: http://www.worldbank.org/lk

இச் சுகாதார சேவை அபிவிருத்தித் திட்டத்தைப் பற்றிய மேலதிக விபரங்களறிய தரிசிக்கவும் : http://www.wordbank.lk/external/default/main?pagePK=64027221&piPK=64027220 &theSitePK=233047&menuPK=287064&Projectid=P050740